**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.162/2023** **P.W.2**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | கார்த்திக் |
| த/பெ. | ராஜேந்திரன் |
| வயது | 26 |
| வசிப்பிடம் | எண்.4/175, 5வது தெரு, சிறுதாவூர், செங்கல்பட்டு மாவட்டம் |
| தொழில் | தனியார் நிறுவனம் |
| **முதல் விசாரணை** | **12.08.2026** |

நான் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன விஜயகுமார் எனக்கு தெரிந்த நபர். விபத்தை நான் நேரில் பார்த்தேன். புகார் நான் கொடுக்கவில்லை. மருத்துவமனைக்கு சென்று இறந்துபோன நபரை பார்த்தேன். விபத்து நடந்த விவரத்தை இறந்துபோன நபரின் அப்பாவிற்கு செல்போன் மூலமாக தகவல் சொன்னேன் என்று சொல்லியுள்ளேன். அந்த செல்போன் நம்பர் எனக்கு ஞாபகமில்லை. நான் விபத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் கவனமாகவும், சாலை விதிகளை மதித்தும் வாகனத்தை ஓட்டினார், இறந்துபோன நபர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வந்து மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள். குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**